மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெறப்படுகிறது.

"பொதுச் சுகாதாரம் பற்றிய 19-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 249,91,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (6-4-1994) காலை 10 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்

88. தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தின் 1992-93-ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது) (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

47. கோரிக்கை எண். 18 – மருத்துவம் மற்றும் கோரிக்கை எண். 19 – பொதுச் சுகாதாரம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள், 1994-95 (தமிழ், ஆங்கிலம்.)

48. கோரிக்கை எண். 19 - சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1994-95. (தமிழ், ஆங்கிலம்.)

49. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறையின் செயல்முறைத் திட்டம், 1994-95. (ஆங்கிலம்.)